# 12 - ஆம் வகுப்பு

## வணிகவியல்

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

## பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. பிவருவனவற்றில் எவை அமைப்பின் கோட்பாடுகளில் இடம் பெறாதவை?
   (அ) ஒரு முனை இயக்கம் (ஆ) கூட்டாண்மை (இ) கட்டுப்பாட்டு வீச்செல்லை
   (ஈ) தரவரிசைக் கோட்பாடு
2. மன்னர்களாக மதிக்கப்படுபவர்கள் யார்?
   (அ) வாடிக்கையாளர்கள் (ஆ) நுகர்வோர்கள் (இ) வியாபாரிகள் (ஈ) பணியாளர்கள்
3. பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுமம் ஒன்றின் உறுப்பினருடய பொறுப்பு ---------
   (அ) வரையறுக்கப்படாதது (ஆ) வரையறுக்கப்பட்டது (இ) கட்டாயமாக்கப்பட்டது
4. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை- A (TABLE - A ) என்பது ------------
   (அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி (ஆ) இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்
   (இ) நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி (ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி
5. இரு பொது ஆண்டுக் கூட்டங்கட்கு உள்ள இடைவெளி -----------
   அ. 15 மாதங்கட்குமேல் செல்லக்கூடாது. ஆ. 12 மாதங்கட்குமேல் செல்லக்கூடாது.
   இ. 18 மாதங்கட்குமேல் செல்லக்கூடாது ஈ. 20 மாதங்கட்குமேல் செல்லக்கூடாது.
6. நிறுமச் செயலர் ஒருவர் --------------
   (அ) அரசால் (ஆ) இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால் (இ) இயக்குநர் அவையால்
   (ஈ) ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குநர்களால் நியமிக்கப் பெறுகிறார்.
7. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கீழ்க்கண்டவற்றுள் எந்நடவடிக்கை வழக்கமாக மேற்கொள்ளப்பட மாட்டாது?
   (அ) தணிக்கையர் நியமனம் (ஆ) கடனீட்டுப் பத்திர வெளியீடு
   (இ) பதவி விலகுமிடத்திற்கு இயக்குநர்களை நியமித்தல் (ஈ) பங்காதாயம் விளம்பப்படல்.
8. பங்குநர்கள் நிறுமனத்தின் உண்மையான -------------
   (அ) உறுப்பினர்கள் (ஆ) இயக்குநர்கள் (இ) உரிமையாளர்கள் (ஈ) பங்குதாரர்கள்
9. கீழ்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநில சட்டமன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது ?
   (அ) பட்டய ( சாசன) நிறுமம் (ஆ) அயல்நாட்டு நிறுமம் (இ) அரசு நிறுமம்
   (ஈ) சட்ட முறை நிறுமம்
10. ஒரு இயக்குநர் ---------- செயலாற்றுகிறார் .
    (அ) நிறுமத்தின் முகவராக (ஆ) நிறுமத்தின் பொறுப்பாண்மையராக
    (இ) நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக (ஈ) மேற்சொன்ன அனைத்துமாக
11. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர் ----------
    (அ) கலைமான் (ஆ) கரடி (இ) காளை (ஈ) முடவாத்து



12. பத்திரங்கள் ஒப்பந்த ( ஒழுங்குபடுத்துதல் ) சட்டம் இவ்வாண்டு நிறைவேற்றப்பட்டது.
    (அ) 1952 (ஆ) 1956 (இ) 1964 (ஈ) 1966
13. பங்காதாயம் கூட்டுறவில் ----------- அடிப்படையில் உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.
    (அ) பங்கு முதல் (ஆ) பங்குகள் வாங்கிய எண்ணிக்கையில் (இ) ஆதரவின் கூட்டுறவு
    (ஈ) இவை ஏதுமில்லை
14. முதன் முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு ------------
    (அ) இங்கிலாந்து (ஆ) அமெரிக்கா (இ) சுவிஸ் (ஈ) இந்தியா
15. அரசுத் தொழில் வடிவமைப்புகளில் மிகவும் பழமையானது ------------
    (அ) துறைவாரி அமைப்பு (ஆ) பொதுக் கழகம் (இ) அரசு நிறுமங்கள்
    (ஈ) வாரிய அமைப்புகள்
16. இது அரசுக்கு சொந்தமாகவும் அதன் கட்டுப்பாட்டின் கீழும் இருக்கும் --------
    (அ) தனியாள் வணிகம் (ஆ) கூட்டாண்மை (இ) அரசுத் தொழில்கள்
    (ஈ) கூட்டுப் பங்கு நிறுமம்
17. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்ற தொழில்கள் -----------
    (அ) பேரளவு வியாபாரம் (ஆ) நடுத்தர வியாபாரம் (இ) சிற்றளவு வியாபாரம்
18. கூட்டாண்மையை பதிவு செய்தபின், பதிவாளர் வழங்கும் சான்றிதழின் பெயர் ------------
    (அ) கூட்டாண்மை சான்றிதழ் (ஆ) பதிவுச் சான்றிதழ் (இ) உரிமைச் சான்றிதழ்
19. ஒரு கூட்டுப் பங்கு நிறுமத்தை பதிவு செய்தல் ---------------
    (அ) கட்டாயமாக்கப்பட்டுள்ளது (ஆ) நிறுமத்தின் விருப்பத்திற்கு உட்பட்டது (இ) கட்டாயமில்லை
20. தன் வணிகர்கள் பங்குமாற்றங்களில் இவர்களுக்கான வாணிகத்தில் ஈடுபடுகிறார்கள்.
    (அ) வடிக்கையாளர்களுக்காக (ஆ) தங்களுடைய சொந்த நடவடிக்கைகளுக்காக
    (இ) மற்ற உறுப்பினர்களுக்காக (ஈ) மேற்கண்ட அனைத்தும்

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 21- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. அமைப்பு வரையறு?
22. தனியாள் வணிகரின் பொறுப்பு எத்தகையது? அதனை விவரி.
23. மாற்று இயக்குநர் என்பவர் யார்?
24. இராபர்ட் ஓவன் என்பவர் யார்? அவரைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.
25. கூட்டத்தில் குறைவெண் என்றால் என்ன?
26. கூட்டுறவு பண்டகசாலை என்றால் என்ன?
27. அமைப்பு முறையேடு என்றால் என்ன?
28. பொது கழகத்தின் மேலாண்மை பற்றி கூறுக.
29. முரண்தடை கூட்டாளி என்றால் என்ன?
30. வாக்கெடுப்பு என்றால் என்ன?

## பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 31- க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 3 = 21$

31. ஒரு நிறுமத்தின் மேலாண்மை கட்டமைப்புக் குறித்து சுருக்கமாக எழுதுக.
32. பங்குகளுக்கும், கடனீட்டுப் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளில் எவையேனும் மூன்றினை எழுதுக.
33. ஆண்டு பொதுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை?
34. கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையின் குறைபாடுகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக.
35. இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்களைப் பற்றிக் கூறுக.
36. கூட்டாண்மை நிறுவனத்தில் உரிமை வயது அடைந்த பின் இளவரின் நிலை யாது?
37. அரசு தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம்?
38. போல்ட்டின் ஆற்றல்கள் யாவை?
39. சட்டமுறை கூட்டம் என்றால் என்ன?
40. மக்களாட்சி முறையில் மேலாண்மை - விளக்குக.

## பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $7 \times 5 = 35$

41. அரசுத் தொழில்களின் நோக்கங்களை விவரி. ( ஏதேனும் ஐந்து )

( அல்லது )

செபியின் பணிகள் ( ஆறு ) மற்றும் அதிகாரம் ( நான்கு ) ஆகியவற்றை விளக்குக.

42. பொதுத் துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளில் எவையேனும் ஐந்திணை அட்டவணை படுத்துக.

( அல்லது )

நிறுமச் செயலரின் பணிகள் மற்றும் சட்டமுறை கடமைகள் யாவை?( ஒவ்வொன்றிலும் 5 எழுதுக )

43. ஒரு நல்ல அமைப்பின் தன்மைகளுள் ஐந்தினை மட்டும் விளக்குக.

( அல்லது )

சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கினை விவரி. ( ஏதேனும் ஐந்து )

44. அமைப்பு முறையேடு - செயல்முறை விதிகள் வேறுபடுத்துக.

( அல்லது )

கூட்டாளிகளின் உரிமைகள் மற்றும் கடமைகளை விவரி ( ஒவ்வொன்றிலிருந்தும் ஐந்து எழுதுக)

45. கூட்டுறவு சிறப்பங்காடி பொருள் தந்து அதன் சிறப்பு இயல்புகளை தருக

( அல்லது )

கூட்டுறவு அமைப்பின் சிறப்பியல்புகள் விவரி. (ஏதேனும் ஐந்து )

46. பன்னாட்டு நிறுமங்கள் பற்றி நீவீர் அறிவது யாது? அதன் சிறப்பியல்புகள் பற்றி எழுதுக.

( அல்லது )

கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விவரி. (ஏதேனும் ஐந்து )

47. பங்கு மாற்றகம் -- வரைவிலக்கணம் எழுதுக. பங்கு மாற்றகத்தின் இயல்புகள் ( மூன்று ) மற்றும் பணிகள் ( மூன்று ) விளக்குக.

( அல்லது )

பங்குகட்கும் கடனீட்டுப்பத்திரங்கட்கும் உள்ள வேறுபாடுகளை விவரி. ( ஏதேனும் 5 )

B.BALAJI, GHSS,PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613